# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW- 8 |
| Name | : | தனலெட்சுமி |
| Husband Name | : | ராஜு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 70 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.09.2024***

***<u>1ம் எதிரி ஆஜர் 2, 3 எதிரி கள் வருகை</u>***

**அரசுதரப்பில் முதல் விசாரணை**

நான் பள்ளியக்கிரகாரம் காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் இறந்துவிட்டார். எனக்கு வெண்ணிலா, ராணி என்ற இரண்டு மகள்களும் பிரபாகரன் என்ற மகனும் உள்ளனர். பிரபாகரன் இ றந்துவிட்டார். இறந்துபோன குணசீலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது இரண்டாவது மகள் வெண்ணிலாவின் மகன். குணசீலன் தஞ்சாவூர் கோடியம்மன் கோவில் பின்பக்கம் கார் வேலை பார்க்க போவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் மணிகண்டன், கார்த்தி மற்றும் குமார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான், எனது பேத்தி மோனிசா, எனது மகள் வெண்ணிலா ஆகியோர் எனது வீட்டில் இருந்தோம். நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் இருக்கிறோம். தனித்தனி வீடு இல்லை. அப்போது மணிகண்டன், கார்த்தி, குமார் ஆகியோர் எங்கள் வீட்டுக்கு வந்து வீட்டில் இருந்த டிவி, கண்ணாடி, மற்ற சாமான்களை உடைத்துக்கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் கண்ணாடி அவர்கள் உடைத்த கண்ணாடி தான். அது **சாபொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் டிவி அவர்கள் உடைத்த டிவி தான். எனது மகள் வெண்ணிலா ஆஜர் எதிரிகளை மறித்தபோது உனது மகனை கொண்டுவந்து விடு என்றும் அவனை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்றும் வெண்ணிலா தடுத்தால் அவரையும் கொன்றுவிடுவதாக ஆஜர் எதிரிகள் மிரட்டினார்கள். பிறகு எனது மகள் வெண்ணிலா

என்னிடம் குணசீலன் வேலை பார்க்கும் கோடியம்மன்கோவில் இடத்தில் இருந்து வீட்டிற்கு வருவார் அவரை இங்கு தகறாறு நடந்ததால் அவரை வரவிடாமல் தடுக்குமாறு என்னிடம் சொன்னார். நான் போனபோது சுந்தர் என்பவர் குணசீலனை வண்டியில் வைத்து ஏற்றிக்கொண்டு வந்தார். நான் அவர்களை போகவேண்டாம் என்று கும்பிட்டு வேண்டிக்கொண்டேன். அவர்கள் கேட்காமல் சென்றுவிட்டார்கள். நான் வீட்டிற்கு போய் பார்த்தபோது மண்டையை உடைத்து இரத்த வெள்ளத்தில் மல்லாக்காக கிடந்தார். பேரன் எப்படி இறந்தார் என்று எனது மகள் வெண்ணிலா மற்றும் எனது பேத்தி மோனிஷாவிடம் கேட்டேன். குணசீலன், ஆஜர் எதிரிகளிடம்இருந்து தப்பித்து வின்சென்ட் வீட்டு சந்துக்கு தப்பி ஓடிச்செல்லும் போது அவரை மறித்து கடப்பாறை, அரிவாள், பைப் கம்பி ஆகியவற்றால் அவரை ஆஜர் எதிரிகள் தாக்கி கொன்றுவிட்டனர். பிறகு ஊர்காரர்கள் போலிசாருக்கு போன் செய்தார்கள். போலிசார் அவர்களை கைது செய்து சென்றார்கள்.

**<u>எதிரிகளின் வழக்கறிஞர்கள் இருந்தும் குறுக்குவிசாரணை என்றுசொன்னதால் குறக்கு விசாரணை முடிக்கப்பட்டது.</u>**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW-9 |
| Name | : | புகழேந்தி |
| Father Name | : | ராஜேந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.09.2024***

***<u>1ம் எதிரி ஆஜர் 2, 3 எதிரி கள் வருகை</u>***

**அரசுதரப்பில் முதல் விசாரணை**

நான் சாலைக்கார தெரு, கீழவாசலில் வசித்து வருகிறேன். நான் பெயின்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்துபோன குணசீலன் என்பவரை எனக்கு தெரியும். இறந்துபோனவருடைய தங்கை மோனிசாவை நான் திருமணம் செய்துள்ளேன். குணசீலன் எப்படி இறந்தார் என்ற சம்பவம் எனக்கு தெரியாது. நான் அப்போது ஊரில் இருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் 28.5.2020ம் தேதி 3மணியளவில் நான் வேலைக்கு சென்றிருந்தபோது மோனிஷா எனக்கு போன் செய்து குணாவை மணிகண்டன், கார்த்திக், அரசகுமார் ஆகியோர் தாக்கி கொலை செய்துவிட்டதாக சொன்னார் என்றாலும் அதன்பேரில் 5.30மணிக்கு எனது மாமியார்

வீட்டிற்கு சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தார்கள் என்றும் அப்போது நான் சம்பவத்தைப்பற்றி கேட்டு தெரிந்துகொண்டேன் என்றாலும் ஆஜர் எதிரிகள் குணசீலனை தாக்கிவிட்டு கருவை வயலில் ஓடிவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றும் அப்போது மழை தூறிக்கொண்டிருந்தது என்று சொன்னேன் என்றாலும் குணாவை மருத்துவமனைக்கு கொண்டு செல்லலாம் என்று தூக்கி வந்து வின்செென்ட் வீட்டு கூரை தாழ்வாரத்தில் வைத்தார்கள் என்றும் அப்போது குண இ றந்தது தெரியவந்தது என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது சம்பவத்தை சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்துகொண்டு அவர்களுக்கு சாதகமாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.